INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

**ஊடக அறிக்கை: யுகே இல் புகலிடம் கோருபவர்களின் குடும்பங்களைத் தாக்கும் இலங்கைப் பாதுகாப்பு தரப்பினர்**

**24 ஒக்டோபர் 2019**


W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA


**ஜோகானஸ்பேர்க்:** யு.கேயில் உள்ள தமிழப் புகலிடக்கோரிக்கையாளர்கள் தமது நாட்டிலுள்ள தமது குடும்பங்கள் தாங்கள் இலண்டனில் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும் படங்கள் காட்டப்பட்டு அச்சுறுத்தப்பட்டு சில சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாக தாக்கப்பட்டு இலங்கைப் பாதுபாப்பு படையினரால் வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றார்கள். குறிப்பிட்ட நபர் இலண்டனில் ஊடகம் ஒன்றிற்கு செவ்வி வழங்கி அல்லது ஆர்ப்பாட்டம் ஒன்றில் பங்குபற்றி சில நாட்களுக்குள்ளேயே இலங்கையின் வடக்கில் உள்ள கிராமங்களில் உள்ள அவர்களின் மனைவிமார் அல்லது பெற்றோரைத் தேடி பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் செல்கின்றனர்.

“நாடு கடந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழர்களை யு.கே இல் கண்காணித்தல் ஆனது பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சியங்களையும் மௌனிக்கச் செய்யவே பாவிக்கப்படுகின்றது என்பதை இது காட்டுகின்றது” என சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்திற்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார், “ பாதிக்கப்பட்ட்வர்களின் குடும்பங்கள் முதலில் நாட்டை விட்டுச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படாமையால் அரச முகவர்களுக்கு அவர்களை மௌனிக்கச் செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை”.

**நேர்காணல்கள்**

இலங்கை அதிகாரிகள் யுகேயில் இருந்து ஒளிபரப்பு செய்யப்படும் தமிழ் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களையும் சமூகவலைத் தளங்களையும் கண்காணித்து வருகிறார்கள். அண்மைய ஒரு சம்பவத்தில் , இலண்டனில் தொலைக்காட்சியில் நேர்காணல் வழங்கி சில நாட்களிலே பாதுகாப்பு அதிகாரிகள் வடக்கு இலங்கையில் தனது கிராமத்தில் வசித்து வந்த அந்த யுகேயிலுள்ள நபரின் மனைவியைக் கண்டுபிடித்துள்ளார்கள். “ உன்னுடைய கணவன் வெளிநாட்டில் தேவையில்லாத வேலைகள் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் அங்கு போனால் அமைதியாக இருக்க வேண்டும் என்றும் நாங்கள் என்ற படியால் இதனைத் தன்மையான முறையில் உனக்கு சொல்கின்றோம் ஆனால் வேறு ஆட்கள் வந்தால் அவர்கள் தன்மையாக இருக்கமாட்டார்கள்” என்று கூறியதுடன் இவற்றை அவர் நிறுத்த வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். சமூகவலைத் தளங்களில் அவர் வெளியிட்ட பதிவுகள் பற்றியும் மனைவியிடம் விசாரித்துள்ளார்கள். தான் ஊடகத்திற்கு ஒரு நேர்காணலை வழங்கியதைத் தொடர்ந்து குற்ற விசாரணைப் பிரிவினைச் சேர்ந்த அதிகாரிகள் சிவில் உடையில் முல்லைத்தீவில் உள்ள தன்னுடைய வீட்டுக்குச் சென்று அச்சுறுத்தியதாக இன்னுமொரு தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் தெரிவித்துள்ளார். அவருடைய தகப்பனார் தாக்கப்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

போருக்குப் பின்னர் இடம்பெற்ற சித்திரவதையை அடிப்படையாக வைத்து புகலிடம் கோரும் 26 தமிழ் ஆண்களை யு.கேயில் ITJP செவ்வி கண்டது. இவர்கள் சாதாரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ( LTTE) முன்னாள் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் ஆவர் அவர்களிக் மனைவிகள் இத்துடன்/அல்லது வயதான பெற்றோர்கள் முன்னர் LTTE இன் பலமான பிடியில் இருந்த வன்னியின் கிராமங்களில் இன்னமும் வாழ்ந்து வருகின்றார்கள். பாதுகாப்பு முகவர்கள் LTTE இன் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர்களை பணங்கொடுத்து வாடகைக்கு அமர்த்தி சொந்த மக்களையே வேவுபார்க்கும் ஒரு தீவிரமான கண்காணிப்பைக் கொண்ட சூழல் ஒன்று காணப்படுவதாக அவர்கள் விபரிக்கின்றார்கள்.

அண்மையில் 2019 உட்பட தாங்கள் நாட்டை விட்டு தப்பி வந்த பின்னர் பாதுகாப்பு தரப்பினர் தமது குடும்பங்களை திரும்ப திரும்ப தேடிச் சென்றுள்ளதாக அனைவரும் கூறியுள்ளனர். இதன் போது பிரதானமாக பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையிலும் சில சந்தப்பங்களில் இராணுவப் புலனாய்வினர் அல்லது சிவில் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் சென்றிருக்கின்றார்கள்.

ITJP

**ஆர்ப்பாட்டங்கள்**
தாங்கள் இலண்டனில் ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றும் படங்களை தமது குடும்பங்களுக்கு இலங்கையிலுள்ள பாதுகாப்பு முகவர்கள் காட்டுவதாக பெரும்பாலனவர்கள் விபரிக்கின்றார்கள். முன்னாள் இலங்கை இராணுவ அதிகாரி பிரிகேடியர் பிரியங்கா பெர்ணாண்டோ கழுத்து வெட்டுக் சமிக்கையை காட்டி தமிழர்களை அச்சுறுத்திய போது இலங்கை உயர்ஸ்த்தானிகராயலத்திற்கு வெளியே எடுக்கப்பட்ட படங்கள் தமது குடும்பங்களுக்கு காட்டப்பட்டதாக இரண்டு தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கூறியுள்ளனர்.

“முதலில் இன்னொரு குடும்பம் விசாரிக்கப்பட்டு நிகழ்வின் படங்கள் காட்டப்பட்டன, பின்னர் அவர்கள் என்னுடைய குடும்பத்தை விசாரித்ததுடன் அந்த நிகழ்வில் நான் இருக்கும் படத்தையும் காட்டியுள்ளார்கள். இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்று பத்து நாட்களுக்குள் இது இடம் பெற்றுள்ளது”.

மே 2019 போர் நினைவு நிகழ்வின் போது தாங்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் படங்களும் தமது குடும்பங்களுக்கு காட்டப்பட்டுள்ளதாக செவ்வி காணப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்:

“நான் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வேலை செய்வதாக தம்மிடம் தகவல்கள் உள்ளன என அவர்கள் கூறியுள்ளார்கள். முழுக் குடும்பத்தையும் அழிப்போம் எனவும் அவர்கள் அச்சுறுத்தியுள்ளார்கள்.

***மௌனிக்கச் செய்தல்***
கண்காணிப்பானது நாடுகடந்த செயற்பாடுகளை இலக்கு வைப்பதாக மட்டும் இல்லாது இலங்கைக்குள் வாழும் குடும்பத்தினர் தமது உறவினர்கள் முதலில் ஏன் நாட்டை விட்டுப் போனார்கள் என்பது பற்றி கதைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தும் ஒரு வழியாகவும் இருப்பது போல் தெரிகின்றது. செவ்வி காணப்பட்டவர்கள் தாங்கள் இலங்கையில் கூட்டு அரசாங்கத்தின் கீழ் சித்திரவதை செய்யப்பட்டதாக பிரதானமாக குற்றஞ்சாட்டுகின்றனர். அதாவது 2016 இல் (5 சம்பவங்கள்) , 2017 இல் (9 சம்பவங்கள்) மற்றும் 2018 இல் (7 சம்பவங்கள்) ஆனால் 2 சம்பவங்கள் முன்னைய ராஜபக்சவின் அரசாங்கத்தின் போதும் இடம்பெற்றுள்ளது அத்துடன் பாதிக்கப்பட்ட ஒருவர் தான் இந்த வருடம் சித்திரவதை செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டுகின்றார்.

அண்மையில் இடம்பெற்று நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ள சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் 2018 இல் ஒரு வார காலமாக கடத்திச் செல்லப்பட்டிருந்தார். இலண்டனில் உள்ள பாதிக்கப்பட்டவருக்கு தனது உறவினர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது என்ன நடந்தது என்பது பற்றிய விபரம் தெரியவில்லை. ஆனால் தனக்கு உதவி செய்ததாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டதுடன் இப்பொழுது அவர் தலைமறைவாக உள்ளார்.

தாங்கள் நாட்டை விட்டு தப்பி வந்த பின்னர் தமது வீடுகளில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு தமது மனைவிமார் தாக்கப்படுவதாகவும், அவர்களது அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு அச்சுறுத்தப்படுவதாகவும் பல ஆண் சாட்சியாளர்கள் விபரித்துள்ளார்கள். “*நீ ஒரு பயங்கரவாதியை திருமணம் செய்துள்ளாய்*”என ஒரு பெண்ணுக்கு சொல்லப்பட்டது. வயதான பெற்றோர்கள் தாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுவதுடன் உங்களுடைய பிள்ளைகள் “*LTTE இற்கு வேலை செய்கின்றார்கள்*” என்று கூறியுள்ளார்கள். அவர்களது பிள்ளைகள் எவ்வாறு தப்பித்து வெளிநாட்டுக்குச் சென்றார்கள் என குடும்பத்தவர்கள் விசாரிக்கப்படுகின்றார்கள்:

*“நான் எவ்வாறு நாட்டை விட்டுச் செல்லக்கூடியதாக இருந்தது என்றும் இதற்குப் பின்னால் இருப்பவர் யார் என்றும் யு.கேயில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான என்னுடைய நடவடிக்கைகள் பற்றியும் புதுக்குடியிருப்பில் சிவில் உடையில் வந்த சிஐடி அதிகாரிகள் என்னுடைய குடும்பத்தையும் அயலவர்களையும் விசாரித்தார்கள்.”*

அச்சம் மிகவும் தீவிரமாக உள்ளது இதனால் உறவினர்கள் தொடர்பாடலை துண்டித்துள்ளதுடன் யு.கேயிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உணர்வுபூர்வமான ஆதரவு இல்லாமலும் விடப்பட்டுள்ளார்கள்.

***அரசியல் ரீதியான நடவடிக்கைகள்***
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இலங்கையில் கீழ்மட்ட அரசியல் வேலைக்கு உதவி செய்தல் மற்றும் போரில் காணாமற்போனவர்களின் பெயர்களைச் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் இலங்கையில் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டதாக இலண்டனில் செவ்வி காணப்பட்ட இரண்டு ஆண்கள் தெரிவித்துள்ளனர். தனது விடுதலைக்குப் பின்னர் தமது வீட்டுக்கு அடையாளப்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்களில் சிவில் உடையில் தனது குடும்பத்தினரிடம் வந்ததாக ஒருவர் தெரிவித்தார். “*அவர்கள் என்னுடைய குடும்பத்தை அழிப்போம் என அச்சுறுத்தியுள்ளார்கள்*” , தனது குடும்பத்திற்கு மேலும் ஆபத்தை ஏற்படுத்தும் என்ற அச்சத்தில் தான் இப்போது வீட்டுக்கு தொலைபேசி எடுப்பது இல்லை என விபரித்துக் கூறினார். மற்றைய நபரின் குடும்பத்திடமும் சிவில் உடையில் வந்த பொலிசார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான என்னுடைய ஈடுபாட்டைப் பற்றிக் கேட்டதாகவும் என்னைப் தாங்கள் பிடித்தால் மீண்டும் உயிருடன் பார்க்க முடியாது என எச்சரிக்கை செய்தார்கள்.

**முறைப்பாடு செய்தல்**
கண்காணிப்பு, அச்சுறுத்தல் அல்லது தாக்குதல் பற்றி தமது குடும்பத்தவர்கள் பொலிசாருக்கு அறிவிக்க முயற்சி செய்ததாக செவ்வி காணப்பட்டவர்களில் அரைவாசிப் பேர் தெரிவித்தார்கள். தமது அன்புக்குரியவர் முதலில் தடுத்து வைக்கப்பட்ட போது ஏற்பட்ட தமது அனுபவம் காரணமாக சிலர் முறைப்பாடு செய்வதற்கு விரும்பவில்லை:

*“நான் கடத்திச் செல்லப்பட்டவுடன் என்னுடைய குடும்பத்தினர் பொலிசாரிடம் சென்றார்கள். ‘கவலைப்பட வேண்டாம் அவர் விரைவில் திரும்பி வருவார்’ என அவர்கள் தெரிவித்தார்கள்”*

தங்களை தேடி வந்தது பற்றி பொலிசாருக்கு அறிவிக்க வேண்டாம் என தமது குடும்பங்கள் குறிப்பாக அச்சுறுத்தப்பட்டதாகவும் அல்லது தமது குடும்பத்தினர் அவ்வாறு அறிவிப்பதற்கு மிகவும் அச்சப்படுகிறார்கள் என பலர் தெரிவித்தார்கள். வாக்குமூலம் கொடுப்பதற்கு ஒவ்வொருவரும் அச்சப்படுவதாலும் இதற்குப் பொறுப்பான தனிநபர்களின் பெயர்கள் அவர்களுக்கு தெரியாது என்பதாலும் கண்கண்ட சாட்சிகள் இல்லாமையால் உள்ளூர் பொலிசார் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாக முயற்சி செய்த பலர் தெரிவித்தார்கள். அச்சுறுத்தியவர்கள் சிவில் உடையில் இருந்தமையால் அரசாங்க தரப்பினராக அவர்கள் இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் அவர்களுக்கு சொல்லப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் உன்னுடைய மகன்கள் LTTE அத்துடன் LTTE இனை மீளஉருவாக்கம் செய்ய முயற்சி செய்கிறார்கள் அல்லது இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதில்லை என்று கூறி பொலிசார் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பு தெரிவிப்பதாக கூறப்படுகின்றது. 2019 நடுப் பகுதியில் இலண்டனில் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய பின்னர் இலங்கையிலுள்ள இந்த நபரின் பெற்றோர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள் ஆனால் முறைப்பாடு

செய்யக்கூடாது என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் அவர்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றி முறைப்பாடு செய்வதற்கு முயற்சி செய்துள்ளார்கள்.

*''என்னுடைய பெற்றோர் இது பற்றி முறைப்பாடு செய்வதற்கு பொலிஸ்நிலையத்திற்குச் சென்றார்கள் ஆனால் பொலிசார் அந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அவர்களை அச்சுறுத்திய நபர்களின் பெயர்களைக் கேட்டார்கள் அத்துடன் அவர்களிடம் பெயர்கள் எதுவும் இல்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் சிவில் உடையில் வெவ்வேறு புலனாய்வு அதிகாரிகள் வந்து சென்றார்கள். இப்போது என்னுடைய பெற்றோர்கள் தனியாகத்தான் வீட்டில் இருக்கின்றார்கள் அத்துடன் அருகில் இராணுவ முகாம் ஒன்று இருப்பதாலும் அச்சத்துடன் உள்ளார்கள்''.*

*செவ்வி காணப்பட்டவர்களில் 5 பேரின் குடும்பத்தினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளார்கள் ஆனால் மூன்று பேரிடம் அவர்கள் முதலில் பொலிஸ் அறிக்கையை கேட்டார்கள் ஆனால் அதனை வழங்க பொலிஸ் மறுத்து விட்டது.*

''சில ஊழல் மிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் வேலையால் தான் சித்திரவதையை அடிப்படையாக வைத்து தமிழர்கள் புகலிடம் கோரும் தற்போதைய போக்கு உள்ளது என்பதை சுபலமாக கூறமுடியும் ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மீதான திட்டமிட்ட அச்சுறுத்தல்கள் பற்றிய அறிக்கைகள் இது போன்ற ஒரு கோட்பாட்டை பொய்யாக்குகின்றது'' என சூக்கா தெரிவித்தார். கண்காணித்தல் , அச்சுறுத்தல் மற்றும் குடும்பங்களை தொடர்ச்சியாக தண்டித்தல் போன்ற செயற்பாடுகள் வெளிநாட்டில் இடம்பெறும் சிறிய ஆர்ப்பாட்டங்களை கூட நிறுத்த விருப்பும் மற்றும் நேர்காணல்களை கொடுப்பவர்களை தண்டிக்கும் இலங்கை அரசாங்கத்தின் சித்த பிரமையை சுட்டிக்காட்டுகின்றது. நன்கொடையாளர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் கொடுக்கப்பட்ட சமரசம் பற்றிய கதையுடன் இந்த அணுகுமுறை எந்த வழியிலும் ஒத்துப் போகவில்லை''.

தொகுப்பு அட்டவணை

| உசாத்துணை இல. | விஜயம் செய்த வருடங்கள் | புகலிடக்கோரிக்கையின் அடிப்படை | சம்பவம் | பொலிசாரிடம் செல்வதற்கு முயற்சி செய்தமை |
|---|---|---|---|---|
| S50 | 2017 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை , யுகே இனை வந்தடைந்தது 2018. | தகப்பனார் தாக்கப்பட்டார் | ஆம் ஆனால் மறுக்கப்பட்டது |
| S60 | 2018 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | தயார் அச்சுறுத்தப்பட்டார் | மனித உரிமைகள் ஆணைக் குழு பொலிஸ் அறிக்கை கேட்டார்கள். பெற்றுக் கொள்ளமுடியவில்லை. |
| S45 | 2018 | 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | சகோதரர் தாக்கப்பட்டார் | இ.ம.உ.ஆ ஆம் ; பொலிஸ் மறுத்து விட்டது. |
| S52 | 2017 on | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | TID – அச்சுறுத்தல்கள் | பொலிஸ் மறுத்து விட்டது. |
| S71 | 2018, 2019 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | TIS & SLA – தகப்பனார் தடுத்து வைக்கப்பட்டார் தயாரைக் கைது செய்யப் போவதாக அச்சுறுத்தினார்கள் | இல்லை |
| S61 | 2019 | 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | தகப்பனாரை அச்சுறுத்திய CID | பொலிஸ் மறுத்து விட்டது. |
| W265 | 2019 | 2016 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | பெற்றோரை அச்சுறுத்திய CSD | இ.ம.உ.ஆ பொலிஸ் அறிக்கை கேட்டது; பொலிஸ் ஆதாரம் கேட்டது |
| S62 | 2017, 2018 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | பெற்றோரிடம் தேடிச் சென்ற CID & SLA | இல்லை |
| S63 | 2017.2018 | 2016 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்பட்டமை | குடும்பத்தினரிடம் தேடிச் சென்ற CID & SLA | இல்லை |
| S72 | 2017,2018 | 2015-16 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை, 2016 இல் வெளியேறியமை | குடும்பம் அச்சுறுத்தப்பட்டது | முறைப்பாடு செய்யக்கூடாது என எச்சரிக்கப்பட்டது |
| S42 | 2018 | 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | மனைவியை அச்சுறுத்திய CID | இல்லை |
| S46 | 2019 | நாட்டை விட்டு வெளியேறியது 2018. 2018. இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | வீட்டுக்கு தேடி வந்த MIC . உறவினர் இரு தடவைகள் நிறுத்தி விசாரிக்கப்பட்டார்.. | பொலிஸ் மற்றும் இ.ம.உ.ஆ முறைப்பாட்டை ஏற்க மறுத்து விட்டார்கள்.. |
| S64 | 2018 | 2016 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | சிவில் உடையில் தேடிவந்த CID<br>தகப்பனார் தாக்கப்பட்டார். | பொலிஸ் மற்றும் இ.ம.உ.ஆ முறையிடப்பட்டது |
| S56 | 2018, 2019 | 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | சீருடையில் வந்த பொலிஸ் மற்றும் CID குடும்பத்தினரை அச்சுறுத்தினார்கள் | இ.ம.உ.ஆ இற்கு முறையிடப்பட்டது |
| S70 | 2018 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | பெற்றோரை அச்சுறுத்திய பொலிசார். | முறையிடக்கூடாது என எச்சரிக்கப்பட்டது ஆனால் ஒரு சட்டத்தரணியை அணுகினார்கள். |
| S44 | 2014 | 2014 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | குடும்பத்தினரை அச்சுறுத்திய CID | முறையிடக்கூடாது என எச்சரிக்கப்பட்டது |
| S46 | 2018 | 2015 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை, – வந்தடைந்தது 2018. | அவனைக் கொலை செய்வோம் என CID குடும்பத்தினரிடம் கூறியது | பொலிசாருக்கு முறைப்பாடு செய்ய முயற்சிக்கப்பட்டது அத்துடன் அதற்காக அச்சுறுத்தப்பட்டார்கள். |
| S66 | 2018, 2019 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | குடும்பத்திரை அச்சுறுத்தும் CID | முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளமறுத்த பொலிசார் |
| S67 | 2018 | 2010 மற்றும் 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | TID பிணைக்கு பொறுப்பு நின்ற உறவினர் வீட்டுக்கு தேடிச் சென்றது | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| S45 | 2018, 2019 | 2018 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | மனைவி தாக்கப்பட்டார் | பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது |
| S68 | 2017 | 2017. இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை | குடும்பத்தை அச்சுறுத்திய CID | முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிசார் |
| S42 | 2019 | வந்தடைந்தது 2018, 2009-12 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | சிவில் உடை அதிகாரிகள் மனைவியைத் தேடிச் சென்றார்கள் | இல்லை |
| S41 | 2015, 2019 | 2009, 2014-15 , இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை, யுகேயினை வந்தடைந்தது 2019. | குடும்பம் அச்சுறுத்தப்பட்டது | முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிசார் |
| S43 | 2019 | 2019 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | CID. இனால் குடும்பம் விசாரிக்கப்பட்டது | முறைப்பாடு செய்ய அச்சம். |
| W199 | 2018, 2019 | 2016 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | குடும்பம் அச்சுறுத்தப்பட்டது | பொலிசிற்கும் இ. ம உ.ஆ இற்கும் அறிவிக்கப்படட்டது |
| S69 | 2018 | 2017 இல் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை | தகப்பனாரை தாக்கிய CID & SLA | • இ. ம உ.ஆ இற்கும் அறிவிக்கப்படட்டது |

.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT